DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.306/2025**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரவி | கிராமம் : | |
| அப்பா பெயர் : | ஏகாம்பரம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் பொய்க்கைப்புத்தூர் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 , அ.சா.2 , பட்டியல் சாட்சி சுப்பிரமணி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியயும் ஆஜர் எதிரிக்கும், அ.சா.1, அ.சா.2 க்கு இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. 10.01.2023 அன்று காலை 11.00 மணிக்கு ராஜேந்திரன் அவரது இடத்தை சுத்தம் செய்வதற்காக நானும் சரவணனும் சென்றிருந்தோம். அந்த இடம் பொய்க்கைப்புதூர் சுடுகாட்டிற்கு மேற்கே உள்ளது.

2. நாங்கள் வேலை செய்து கொண்டிருந்தோம். ராஜேந்திரன், சுப்பிரமணி , எதிரி ரமேசும் சத்தம் போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். நான் 10 மீட்டர் தூரத்தில் நின்று கொண்டிருந்தேன். பேசிக்கொண்டிருந்த போது திடிரென்று அரிவாளால் ரமேஷ், ராஜேந்திரனை தலையிலும், வலது பக்க விரலிலும் கொத்திவிட்டார். மகேஷ்வரி தேக்க சென்ற போது ரமேஷ் அரிவாளால் வலது கையில் காயம் ஏற்பட்டது. சுப்பிரமணி தள்ளுமுள்ளில் கிழே விழுந்துவிட்டார். நானும் சரவணனும் ராஜேந்திரனையும் மகேஷ்வரியையும் இருசக்கர வாகனத்தில ஏற்றிக்கொண்டு குளித்தலை GH க்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடந்த அன்றைய தினமே மதியம் 11.00 மணியளவில் குளித்தலை அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையின் போது நான் சம்பவத்தை 10 அடி தூரத்தில்இருந்து பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அ.சா.2 ன் அக்கா மகன் ஆவேன். அ.சா.2 ராஜேந்திரன் சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் இடத்தில் அ.சா.3 சரவணன் என்பவரை அவரது தோட்டத்திற்க வேலை செய்வதற்கு அழைத்து சென்றார்கள் என்று போலிஸ் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 4 1/2 ஏக்கர் நிலம் யாருடையது என்று எனக்குத் தெரியாது. அந்த நிலம் எனது மாமாவின் அம்மா பெயரில் உள்ளது என்றும் பாகப்பிரிவினை செய்யாமல் பாடுபட்டு வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நான் அங்கில்லை அந்த சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் அ.சா. 3 சரவணனும் இல்லை என்றால் சரியல்ல.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எதிரி ரமேஷ் அவரது தகப்பனழுருக்கு சொந்தமான இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது அந்த இடத்தை அ.சா.1 , அ.சா.2 சாட்சி–3 அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியை தாக்க முற்படும் போது அ.சா.1, அ.சா.2 ஆகியோர் முள்காட்டில் விழுந்து தன்னிச்சையாக காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மாமாவின் மனைவி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஒரு சம்பவத்தையும் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:01:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.